# சொந்த வீட்டாரின் மேல் ஆதிக்கம் செலுத்த முடியாமல் போனால்

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

36. ஒரு மனிதன் ஒரு ஸ்திரீயைப் போல் நீண்ட தலைமயிர் தன் முதுகில் தொங்கிக் கொண்டு இங்கு வருகிறதை நான் கண்டால், நான், “மிஸ்டர், நீர் ஏன் அம்பட்டன் கடைக்குச் செல்லக் கூடாது? நீர் ஒரு பெண்ணைப் போல் காட்சியளிக்கிறீர்” என்பேன். பாருங்கள்? ஆனால் மனிதர் சாதாரணமாக அவ்விதம் செய்வதில்லை. பாருங்கள்? மனிதர். மனிதர் பிழையற்றவர் என்று நான் கூற வரவில்லை, அவர்கள் ஸ்திரீகளைப் போலவே குற்றமுள்ளவர்கள்.

இதைக் கூற முற்படுகிறேன். **அவ்விதம் செய்யத் தன் மனைவியை அனுமதிக்கும் ஒரு மனிதன் இரட்டிப்பாக குற்றமுள்ளவனாயிருக்கிறான். ஏனெனில் வீட்டார் அவன் சொற்படி தான் நடக்க வேண்டும். அந்த மனிதனுக்கு அவனுடைய சொந்த வீட்டாரின் மேல் ஆதிக்கம் செலுத்த முடியாமல் போனால், அவன் எவ்விதம் அதை தேவனுடைய வீட்டில் செய்ய முடியும்?** பாருங்கள்?

37. இங்கு வருகை தருகின்ற நமது ஸ்திரீகளின் கூட்டத்தைக் குறித்து நான் மிகவும் நன்றியுள்ளவனாயிருக்கிறேன். இதை நான்

மரியாதையோடும் அன்போடும் கூறுகிறேன். இது உண்மையென்று தேவன் அறிவார். தென் பகுதியில் எனக்கு ஒரு போதகர் நண்பர் இருந்தார். நான் அதுவரை கண்டிராத அவ்வளவு சுத்தமாகக் காணப்படும் சபைகளில் ஒன்றை அவர் கொண்டிருந்தார். ஸ்திரீகளைக் குறித்து பேசுகையில், மிகவும் அழகான பெண்கள் அங்கு வந்து பரிசுத்தமுள்ளவர்களாய், தேவபக்தியுள்ளவர்களாய், நீண்ட தலைமயிரை உடையவர்களாய் உட்காருவார்கள். அந்த சபைக்கு சென்று அவர்களைக் கண்டு பேரானந்தமடைய நான் விரும்பினதுண்டு. ஆனால் இன்றைக்கு அவர்களையும் மங்கச் செய்யும் ஸ்திரீகளைக் கொண்ட ஒரு சபையை கர்த்தராகிய இயேசு எனக்கு அருளியிருக்கிறார்.

38. நான் நீசத்தனமாக இருக்க வேண்டும் என்பதற்காக உங்களைக் கடிந்து கொள்வதில்லை. உங்களைக் குறித்து நான் புளாங்கிதம் அடைகிறேன். சாத்தான் எங்காவது காலடி எடுத்து வைக்க எனக்கு பிரியமில்லை. நீங்கள் மேல் நோக்கிச் செல்ல வேண்டுமென்று விரும்புகிறேன், பின் நோக்கி அல்ல. எந்த ஒரு மனிதனும் நயமான சொற்களினால் உங்களை வஞ்சிக்க இடம் கொடாதீர்கள். “ஓ, நல்லது. அதுவல்ல...” என்று

யாராகிலும் கூற அனுமதிக்காதீர்கள். பாருங்கள்? அப்படித்தான் சாத்தான் ஏவாளுக்கு வார்த்தையை வியாக்கியானித்துக் கொடுத்தான் பாருங்கள்? வார்த்தை என்ன உரைக்கிறதோ, அதை அப்படியே விசுவாசியுங்கள். சரி.

*செய்தி:* 64-08-23E **கேள்விகளும் பதில்களும்** COD #18

★★★★★